## கண்டி எசல பெரஹர நம்பிக்கைப் பொறுப்பு - 2015

கண்டி எசல பெரஹரா நம்பிக்கைப்பொறுப்பின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானச் செலவினக் கணக்கு, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1980 இன் 34 ஆம் இலக்க கண்டி எசல பெரஹரா நம்பிக்கைப்பொறுப்பு அதிகாரச்சட்டத்தின் 16(2) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் நம்பிக்கைப்பொறுப்பின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நம்பிக்கைப்பொறுப்பின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நம்பிக்கைப்பொறுப்பின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

கண்டி எசல பெரஹரா நம்பிக்கைப்பொறுப்பின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் மற்றும் சமர்ப்பித்தல் தொடர்பான பொறுப்புக் கூற்று நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) காசுப்பாய்ச்சல் கூற்று ஏற்றுக்கொள்ளப்பட்ட மாதிரியின் பிரகாரம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை

கீழே காட்டப்பட்டுள்ள இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பனவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|
| (அ) 1980 இன் 34 ஆம் இலக்க கண்டி எசல பெரஹரா நம்பிக்கைப்பொறுப்பு அதிகாரச்சட்டம் | |
| (i) 8(1) ஆம் பிரிவு | ஸ்ரீ தலதா மாளிகையின் தியவடன நிலமே, கண்டி சுற்றுப்புற தேவாலயங்களின் சுற்றுபுற பஸ்நாயக்க நிலமேக்கள், கண்டி மாவட்டத்தின் மாவட்ட செயலாளர் மற்றும் சனாதிபதியால் பெயரிடப்படுகின்ற மூன்று உறுப்பினர்களுடன் கூடிய மதியுரைக் குழுவொன்று நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) 16(3) ஆம் பிரிவு | நம்பிக்கைப்பொறுப்பினால் வருடாந்தம் நம்பிக்கைப்பொறுப்பின் நடவடிக்கைகள் தொடர்பான அறிக்கையொன்று தயாரிக்கப்பட்டு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், 2015 ஆம் ஆண்டிற்குரிய அறிக்கை 2016 மார்ச் 21 ஆந் திகதி வரை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iii) 19(3) ஆம் பிரிவு | தகுதி வாய்ந்த அதிகாரியால் பெரஹராவை பார்வையிடும் செயற்பாட்டிற்காக ஆசனங்கள் வழங்கல் அனுமதிப்பத்திரங்கள் வழங்குவதற்காக ஆசனங்களுக்காக அறவிடப்படும் கட்டணம் அல்லது கூடுதலான அறவிடோ அல்லது அசாதாரணமானதோ என கருத்திற் கொள்ளப்பட வேண்டிய போதிலும், நம்பிக்கைப்பொறுப்பினால் அக்கட்டண அறவீடுகள் தொடர்பாக கவனம் செலுத்தாமல் அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டிருந்தது. |

(ஆ) இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை

| | |
|---|---|
| நிதிப் பிரமாணம் 756 | மீளாய்வாண்டிற்காக பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

## 3 நிதி மீளாய்வு

### 3.1. நிதி விளைவு

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான கண்டி எசல பெரஹரா நம்பிக்கைப்பொறுப்பின் நிதி விளைவுகள் ரூபா 116,613 பற்றாக்குறையாக இருந்ததுடன், அதற்கெதிரான முன்னைய ஆண்டின் மிகை ரூபா 1,805,456 ஆக இருந்தமையால், முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 1,922,069 தொகையான குறைவொன்று தென்பட்டது.

மீளாய்வாண்டின் போது தலதா மாளிகைக்கான உதவிகள் ரூபா 500,000 ஆல் குறைவடைந்தமை மற்றும் சனாதிபதி செயலகத்திடமிருந்தான உதவிகள் பெறுவனவு ரூபா 1,362,500 ஆல் அதிகரித்திருந்த போதிலும் ஆசனங்களிலிருந்தான வருமானம் ரூபா 1,897,800 ஆல் குறைவடைந்தமை, பொது நம்பிக்கையாளர் வைப்புக்கள் வட்டி வருமானம் ரூபா 632,000 ஆல் குறைவடைந்தமை மற்றும் நடனக் கலைஞர்களுக்கான கொடுப்பனவு ரூபா 1,262,500 ஆல் அதிகரித்தமை மேற்படி வீழ்ச்சிக்குப் பிரதானமாக தாக்கமளித்திருந்தன.

## 4 செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

1980 இன் 34 ஆம் இலக்க கண்டி எசல பெரஹரா நம்பிக்கைப்பொறுப்பு அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் நம்பிக்கைப்பொறுப்பின் நோக்கங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

* வருடாந்த எசல பெரஹராவை நடாத்தும் பொருட்டு ஸ்ரீ தலதா மாளிகைக்கும் சுற்றுப்புற தேவாலயங்களுக்கும் நிதி மற்றும் ஏனைய உதவிகளை வழங்குதல்.
* பெரஹராவின் கலைநுட்பமான மற்றும் கலாசார பெறுமதியை மேம்படுத்தும் தேசிய கலை மற்றும் நடனங்களை ஊக்குவித்தலும் மேம்படுத்துதலும்.
* எவரேனும் கலைஞர்களினதும் சிற்பிகளினதும் சேவையால் பெரஹராவின் கலாச்சார மற்றும் கலை சார்ந்த பெறுமதியை மேம்படுத்த முடியுமாக இருக்கும் போது அக் கலைஞர்களுக்கும் சிற்பிகளுக்கும் நிதி உதவி வழங்கல்.
* பெரஹராவின் போது பயன்படுத்தக்கூடிய பொருட்களின் உற்பத்தியில் ஈடுபடல்.
* பெரஹராவிற்கு சமூகமளிக்கும் கலைஞர்களுக்கும் நடனக்காரர்களுக்கும் போட்டிகளை நடாத்துதல் மற்றும் அவர்களுக்கு பரிசுகள், சான்றிதழ்கள் மற்றும் ஏனைய வகையில் விருதுகளை வழங்கல்.

(அ) மேற்குறித்த நோக்கங்களில் கீழே காட்டப்பட்டுள்ள நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

i. வருடாந்த கண்டி எசல பெரஹராவின் கலைநுட்பமான மற்றும் கலாசார பெறுமதியை மேம்படுத்தும் தேசிய கலை மற்றும் நடனங்களை மேம்படுத்துதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

ii. வருடாந்த கண்டி எசல பெரஹராவின் போது பயன்படுத்தக்கூடிய பொருட்கள் உற்பத்தியில் ஈடுபட்டிருக்கவில்லை.

(ஆ) நம்பிக்கைப்பொறுப்பு அதிகாரச்சட்டத்தின் 19(1) ஆம் உபபிரிவின் பிரகாரம் தகுதிவாய்ந்த அதிகாரியால் வழங்கப்படும் அனுமதிப்பத்திர அதிகாரத்தின் கீழ் தவிர மற்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு இணங்காமல் அல்லாமல் ஏனைய வகையில் எந்தவொரு நபரினாலும் கண்டி எசல பெஹராவை பார்வையிடும் செயற்பாட்டிற்காக கட்டண அறவீடென்றோ ஏதேனும் வசதிகளுக்காக ஏற்பாடுகளை மேற்கொள்ளல் செய்யக்கூடாத போதிலும், அவ்வாறு அனுமதிப்பத்திரங்களை பெற்றுக் கொள்ளாமல் ஆசனங்களை வழங்கிய நபர்களுக்கு எதிராக எவ்வித நவடிக்கையொன்றும் நம்பிக்கைப்பொறுப்பினால் எடுக்கப்படாதிருந்ததுடன், அதிகாரச்சட்டத்தின் 19 ஆம் பிரிவின் (4) ஆம் உபபிரிவின் பிரகாரம் அறவிடப்பட வேண்டிய கட்டணங்களையோ அல்லது அறவீடுகள் தொடர்பான நிபந்தனைகள் விதிக்கப்படாததன் காரணமாக வெளித்தரப்பினரால் பாரியளவில் வருமானம் உழைக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(இ) இராணி ஹோட்டலின் விறாந்தையை குத்தகைக்கு வழங்கும் போது குத்தகைக்கு எடுத்தவரால் பெரஹராவை பார்வையிடுவதற்காக வழங்குவதற்கு அச்சிடப்படுகின்ற அனைத்து அனுமதிச்சீட்டுக்களையும் கங்கவட்ட கோரளை பிரதேச செயலளாருக்குச் சமர்ப்பித்து முத்திரையிடப்பட்டு வருமானத்தில் 25 சதவீதக் கட்டணமொன்று பெரஹரா நம்பிக்கைப்பொறுப்பிற்கு செலுத்தி உரிய அனுமதிப்பத்திரத்தை பெற்றுக்கொள்ள வேண்டுமென மாநகர சபை மற்றும் இராணி ஹோட்டலின் விறாந்தையை குத்தகைக்கு எடுத்த குத்தகையாளருக்கு இடையே ஏற்படுத்திக் கொண்ட குத்தகை உடன்படிக்கையில் குத்தகை நிபந்தனையாக விதிக்கப்பட்டிருந்த போதிலும் அந்நிபந்தனையின் பிரகாரம் பெரஹரா நம்பிக்கைப்பொறுப்பு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 5 முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டிலான குறைபாடுகள் நம்பிக்கைப்பொறுப்பின் தலைவரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டிருந்தன. ஆக்கபூர்வமான நிதிக்கட்டுப்பாட்டுக் கருவியாக பாதீட்டைப் பயன்படுத்துவது தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.